**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 14.12.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சிறப்புக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 14.12.2020 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்</u>

( 1 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 – இன்கீழ் ரூ. 600.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகளை நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க. எண். 20557/2020/ இ1 நாள் 11.12.2020–ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ. கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| இராசிபுரம் நகராட்சி | 6.00 | 5.10 | 0.90 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண். | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | நாமக்கல் சாலை முதல் காட்டூர், காளியம்மன் கோவில் தெரு, விநாயகம் தெரு, செட்டியண்ணன் தெரு வி. நகர் சாலை 6 & 7 ஆகிய பகுதிகளுக்கு தார்சாலை மற்றும் பழனி தெரு மற்றும் மாதா கோவில் தெருவில் கான்கிரீட் சாலை அமைத்தல். | 2.670 | 4.00 முதல் 7.00 | 200.00 |
| 2 | கோனேரிபட்டி எக்ஸ்டன்சன் 2, காமராஜ் காலனி, காந்தி நகர் தென்வடல் சாலை, கோனேரிப்பட்டி ராம்நகர் தென்வடல் சாலை, இராமதீர்த்தம் சந்து, பிற்பட்டோர் காலனி சாலை, இந்திரா காலனி, வி. நகர் சாலை எண். 4 ஆகிய பகுதிகளுக்கு தார்சாலை மற்றும் கண்டி வெங்கட்ராமன் தெரு, கோபால் தெரு, தினசரி மார்கெட்– குரங்காட்டி தெரு, திருவேங்கடவிலாஸ் சந்தில் கான்கிரீட் சாலை அமைத்தல். | 3.105 | 4.00 முதல் 7.00 | 200.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மேற்கு காலனி, வள்ளலார் கோவில் தெரு, எல்லப்பா தெரு 3, வரதராஜுலு தெரு, திரு.வி.க தெரு, நெசவாளர் காலனி சாலைகள், மாரப்பன் தோட்டம் E.B. சாலை, காதர் தெரு ஆகிய பகுதிகளுக்கு தார்சாலை மற்றும் சந்துவீரி தெரு, காதர் தெரு மேற்கு, சிக்கா தெரு, அங்காளம்மன் கோவில் – அண்ணாசாலை தெருவில் கான்கிரீட் சாலை அமைத்தல். | 2.915 | 4.00 முதல் 7.00 | 200.00 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(4267/20/இ1)

**தீர்மானம் எண். 922**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– சு. பிரபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.